| | | | |
|---|---|---|---|
| දුරකථන<br>தொலைபேசி<br>Telephones | 011-2136600<br>011-2136650 | මගේ අංකය<br>எனது இல.<br>My No. | PSC/EST/2-4-34/1/2013 |
| ලේකම්<br>செயலாளர்<br>Secretary | 011-2136602 | ඔබේ අංකය<br>உமது இல.<br>Your No. | |
| ෆැක්ස්<br>தொலைநகல்<br>Fax | 011-2876169<br>011-2876181 | දිනය<br>திகதி<br>Date | 2024.06. |
| විද්‍යුත් තැපෑල<br>மின் - அஞ்சல்<br>E - mail | info@psc.gov.lk | | |
| වෙබ් අඩවිය<br>இணையத்தளம்<br>Website | www.psc.gov.lk | | |

රාජ්‍ය සේවා කොමිෂන් සභා කාර්යාලය
அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்
**OFFICE OF THE PUBLIC SERVICE COMMISSION**

අංක 1200/9, රජමල්වත්ත පාර, බත්තරමුල්ල
இல. 1200/9, இராஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை
**No. 1200/9, Rajamalwatta Road, Battaramulla**


---

பகிரங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை : 02/2024

அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள்
மற்றும் திணைக்களத் தலைவர்கள்

<u>வருடாந்த இடமாற்றக் குழுக்களுக்குத் தொழிற்சங்கப் பிரதிநிதிகளை நியமித்தல் - பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகள் 250 (III)</u>

பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகள் 250 (III) பிரகாரம் அதில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் தொழிற்சங்கங்களுக்கு வருடாந்த இடமாற்றக் குழுக்களில் பிரதிநிதித்துவமொன்று உரித்தாகும்.

02. எவ்வாறாயினும், தொழிற்சங்கமொன்றைப் பிரதிநிதித்துவப்படுத்துவதன் பொருட்டு வருடாந்த இடமாற்றக் குழுவானது பின்வரும் நபர்களை நியமித்தலாகாது எனப் பகிரங்க சேவை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

(அ) ஓய்வு பெற்ற அலுவலரொருவர்
(ஆ) ஏற்புடைய வருடாந்த இடமாற்றக் குழுவின் விடயப் பரப்பின் கீழ் வரக்கூடிய சேவை/பதவியிலிருந்து வேறுபட்ட சேவை/பதவியைச் சேர்ந்த அலுவலரொருவர்
(இ) அங்கீகரிக்கப்பட்ட இடமாற்ற நடைமுறைக்கு அமைய வழங்கப்பட்ட இடமாற்றக் கட்டளைக்கு இணங்கியொழுகாமையின் காரணமாக ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் குற்றவாளியாக்கப்பட்டுள்ள அலுவலரொருவர்
(ஈ) பணித் தடைக்கு உள்ளான அல்லது கட்டாய லீவு வழங்கப்பட்ட அல்லது குற்றப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள அலுவலரொருவர்

03. மேலும், புலனாய்வுக்கு உள்ளாகியுள்ள அலுவலரொருவரையும், அவர் சந்தேகத்திற்கு ஆளாகியுள்ள குற்றத்தின் பாரதூரத்தன்மையைக் கவனத்திற் கொண்டு வருடாந்த இடமாற்றக் குழுவிற்கு நியமிக்கப்படுவதை நிராகரிக்கும் அதிகாரம் ஏற்புடைய இடமாற்ற அதிகாரிக்கு உரித்தாகும்.

04. குறிப்பிட்ட ஒரு வருடத்தின் இடமாற்றக் குழுவிற்கு அவ்வருடத்தில் வருடாந்த இடமாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ள அல்லது இடமாற்றத்திற்கு உட்படும் அலுவலரொருவரைப் பெயரிடாதிருப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் தொழிற்சங்கங்கள் எடுத்தல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு பெயரிடப்படுவதைத் தவிர்க்க முடியாத சந்தர்ப்பத்தில் ஏற்புடைய பிரதிநிதி தனது இடமாற்றம் தொடர்பில் தீர்மானமெடுக்கும் நடவடிக்கையில் எந்தவொரு வகையிலும் தொடர்புபடுதலாகாது.
பகிரங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

டப்ளியு.எச்.எம்.எம்.சீ.கே.தயாரத்ன
செயலாளர்
பகிரங்க சேவை ஆணைக்குழு